**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 40 / 2023**
**2025ம் வருடம் ஜூலை மாதம் 21 ம் நாள் திங்கட்கிழமை**

**ம.சா.1 – ஜெயசூர்யா**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

நான் லோடுமேனா வேலை பார்த்து வருவதாக கூறியுள்ளேன். லோடுமேன் சங்கத்தில் நான் உறுப்பினரா என்றால் உறுப்பினர் இல்லை. விபத்து சமயத்தில் நான் பயணம் செய்த டிப்பர் லாரி சரக்குகள் ஏற்றிச்செல்லும் வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் டிரைவர் உள்பட இரண்டு நபர்கள் மட்டும் பயணம் செய்யவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். விபத்து சமயத்தில் மேற்படி டிப்பர் லாரியில் டிரைவர் உள்பட மொத்தம் 7 நபர்கள் பயணம் செய்தோம். விபத்து சமயத்தில் டிரைவரும் நானும் உள்பட 3 நபர்கள் கேபினுள் இருந்தோம். மற்ற நபர்கள் பின்னால் மூடையின் மீது அமர்ந்திருந்தார்கள். இந்த விபத்து சம்மந்தமாக நான் தான் காவல் துறையில் புகார் கொடுத்தேன். நான் காவல் துறையில் கொடுத்த புகாரில் நானும் டிரைவரும் உள்பட 3 நபர்கள் கேபினுள் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் பயணம் செய்த லாரியின் ஓட்டுனரை சுமார் 3 ஆண்டுகளாக எனக்கு தெரியும். நான் இந்த விபத்து சம்மந்தமாக மதுரை பணியாளர் இழப்பீட்டு ஆணையாளர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். நான் பயணம் செய்த லாரியின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதை தெரிந்து கொண்டு அந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது.  விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதை தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.  1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் தகுதிச்சான்று இல்லை என்ற விபரம் எனக்கு தெரியாது.  விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதாலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லை என்பதாலும் அனுமதிக்கப்பட்ட நபர்களை விட அதிக நபர்கள் 1ம் எதிர்மனுதார் வாகனத்தில் பயணம் செய்துள்ளார்கள் என்பதாலும் காப்பீடு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதால் எனக்கு 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.  அதனால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.  1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு லோடுமேனாக பயணம் செய்பவர்களுக்கு காப்பீடு செலுத்தப்படவில்லை என்பதால் 2ம் எதிர்மனுதார் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.  நான் தற்போது எந்த வேலையும் பார்க்கவில்லை.  நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.8 புகைப்படங்கள் தற்போது எடுக்கப்பட்டதாகும்.  எனக்கு விபத்தில் எலும்பு முறிவு காயம் ஏற்படவில்லை, சதையில் மட்டும் சிதைந்த காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் தற்போதும் விபத்திற்கு முன்னர் பார்த்த வேலையை பார்த்து வருகிறேன் என்றும் வழக்கிற்காக வேலை எதுவும் பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.  நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களை பொறுத்து மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்தால் தான் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சைக்கான ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுவதுமாக குணமாகிவிட்டது விபத்தினால் எனக்கு எந்தவித நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரிடம் லோடு மேனாக வேலை பார்து மாதம் ரூ.15000/– வருமானம் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீட்டு தொகையை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மேற்படி 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை